



# வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

**மானியக் கோரிக்கை எண் - 26**

## அறிவிப்புகள்

## 2021-2022

# வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

## மானியக் கோரிக்கை எண் - 26

## அறிவிப்புகள்
## 2021-2022

**சு. முத்துசாமி**
அமைச்சர்
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி

## வீட்டுவசதி மற்றும்
## நகர்ப்புற வளர்ச்சித் துறை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், வழிகாட்டுதல்படியும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் சார்பில் 30 புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**சு. முத்துசாமி**
அமைச்சர்
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி

# தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்

## அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுதல்

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் பொதுமக்கள் வாங்கத்தக்க விலையில் வீடுகள் வழங்கிடும் அரசின் முயற்சியை நிறைவேற்றும் பொருட்டு சுயநிதித் திட்டத்தின்கீழ் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்படும்.



## 1. அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுதல்

| | | |
|---|---|---|
| இடம் | : | பாடிக்குப்பம், சென்னை |
| எண்ணிக்கை | : | 155 அடுக்குமாடி குடியிருப்புகள் |
| மதிப்பீடு | : | ரூ.62.77 கோடி |

## 2. அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுதல்

| | | |
|---|---|---|
| இடம் | : | அயனாவரம், சென்னை |
| எண்ணிக்கை | : | 216 அடுக்குமாடி குடியிருப்புகள் |
| மதிப்பீடு | : | ரூ.86.31 கோடி |



## 3. அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுதல்

| | | |
|---|---|---|
| இடம் | : | சம்பத் நகர் மற்றும் பெரியார் நகர், ஈரோடு மாவட்டம் |
| எண்ணிக்கை | : | 108 அடுக்குமாடி குடியிருப்புகள் |
| மதிப்பீடு | : | ரூ.40.60 கோடி |

## மனைகள் மேம்படுத்துதல்

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் மனை மேம்பாட்டுத் திட்டம் வாயிலாக மனைகள் மேம்படுத்தப்படும்.



## 4. மனைகள் மேம்படுத்துதல்

| | | |
|---|---|---|
| இடம் | : | அம்பத்தூர், சென்னை |
| எண்ணிக்கை | : | 151 மனைகள் |
| மதிப்பீடு | : | ரூ.8.87 கோடி |

## 5. மனைகள் மேம்படுத்துதல்

இடம் : ஆவடி,
திருவள்ளூர் மாவட்டம்

எண்ணிக்கை : 45 மனைகள்

மதிப்பீடு : ரூ.1.74 கோடி



## 6. மனைகள் மேம்படுத்துதல்

இடம் : சோழிங்கநல்லூர்,
சென்னை மாவட்டம்

எண்ணிக்கை : 117 மனைகள்

மதிப்பீடு : ரூ.4.75 கோடி

## 7. மனைகள் மேம்படுத்துதல்

| | | |
|---|---|---|
| இடம் | : | குடியாத்தம்,<br>வேலூர் மாவட்டம் |
| எண்ணிக்கை | : | 306 மனைகள் |
| மதிப்பீடு | : | ரூ.8.50 கோடி |



## 8. மனைகள் மேம்படுத்துதல்

| | | |
|---|---|---|
| இடம் | : | ஆத்தூர்,<br>சேலம் மாவட்டம் |
| எண்ணிக்கை | : | 82 மனைகள் |
| மதிப்பீடு | : | ரூ.4.00 கோடி |

## 9. மனைகள் மேம்படுத்துதல்

| | | |
|---|---|---|
| இடம் | : | ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம் |
| எண்ணிக்கை | : | 54 மனைகள் |
| மதிப்பீடு | : | ரூ.4.00 கோடி |



## 10. மனைகள் மேம்படுத்துதல்

| | | |
|---|---|---|
| இடம் | : | தத்தநேரி, மதுரை மாவட்டம் |
| எண்ணிக்கை | : | 119 மனைகள் |
| மதிப்பீடு | : | ரூ.2.40 கோடி |

## வணிக வளாகம் கட்டுதல்

பொது மக்களின் தேவைக்கு ஏற்ப, பிரதான இடங்களில் வணிக வளாகங்கள் ஏற்படுத்தப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.



## 11. வணிக வளாகம் கட்டுதல்

| | | |
|---|---|---|
| இடம் | : | ஓசூர்,<br>கிருஷ்ணகிரி மாவட்டம் |
| மதிப்பீடு | : | ரூ. 25 கோடி |

## 12. வணிக வளாகம் கட்டுதல்

| | | |
|---|---|---|
| இடம் | : | தோப்பூர் கிராமம்,<br>மதுரை மாவட்டம் |
| மதிப்பீடு | : | ரூ. 23.20 கோடி |



## 13. சென்னை மாவட்டம், இலாயிட்ஸ் காலனியில் குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகங்கள் ரூ.451 கோடி மதிப்பீட்டில் மறுமேம்பாடு செய்தல்.

சென்னை இலாயிட்ஸ் காலனியில் **ரூ.451 கோடி மதிப்பீட்டில் குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகங்கள்** மறுமேம்பாடு செய்யப்படும்.

## 14. குடியிருப்போர் நலச் சங்க நிதி உருவாக்குதல்.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய திட்டங்களில் இருந்து உருவாகும் குடியிருப்போர் நலச் சங்கங்களை ஆதரிப்பதற்காக, அவற்றின் உருவாக்கம் மற்றும் வளர்ச்சியின் ஆரம்ப கட்டங்களில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் தொழில்நுட்ப ஆதரவு மற்றும் நிதி வழங்கி ஊக்குவிக்கும். இதற்காக, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் திட்ட நிதியில் இருந்து "மூலதன நிதி" (Corpus Fund) உருவாக்கப்படும்.



## 15. "சமூகப் பொறுப்பு நிதி" ஏற்படுத்துதல்

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் அதன் சமூகப் பொறுப்பின் ஒரு பகுதியாக, நிலையான நகர்ப்புற வளர்ச்சி, சமூக வலுவூட்டல், பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கான திறன் மேம்பாடு, சுகாதாரம், நகர்ப்புற எழில் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்வதற்கு "சமூகப் பொறுப்பு நிதி" (Social Responsibility Fund) என்ற தனி நிதி உருவாக்கி ஏற்படுத்தப்படும். இந்நிதிக்கு வாரிய திட்டங்களில் வரும் இலாபத்தில் 2% ஒதுக்கப்படும்.

## 16. வாரியத்தால் விற்பனை பத்திரம் தமிழில் வழங்குதல்.

பொது மக்கள் தொடர்புடைய வாரிய ஒதுக்கீட்டு ஆணை, குத்தகை ஒப்பந்தம், மற்றும் விற்பனை பத்திரம் ஆகியவை தமிழில் வழங்கப்படும்.



## 17. கட்டடங்களின் தரம் மூன்றாம் தரப்பு கண்காணிப்பு குழுவின் மூலம் தணிக்கை.

தகுதிவாய்ந்த மூன்றாம் தரப்பு (Third Party) கண்காணிப்பு குழு மூலம் வீட்டுவசதி வாரிய கட்டடங்களின் உறுதித் தன்மையும் தொழில்நுட்பமும் தணிக்கை செய்து உறுதிபடுத்தப்படும்.

## 18. வாரிய பணியாளர்களுக்கு புத்தாக்க பயிற்சி அளித்தல்.

கட்டுமான தொழில்நுட்பம், கட்டட விற்பனை (Real Estate) ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவற்றின் சமீபத்திய முன்னேற்றங்களை அறிந்து கொள்ள உதவும் வகையில் புத்தாக்க தொழில்நுட்ப பயிற்சிகள் வாரிய பணியாளர்களுக்கு வழங்கப்படும்.



## 19. தவணை முறை திட்டத்தை மீண்டும் அறிமுகப்படுத்தல்

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், பொருளாதாரத்தில் நலிவுற்ற மற்றும் குறைந்த வருவாய் / மத்திய வருவாய் பிரிவுகளில் வீடு வாங்குவோர்களின் பொருளாதார அழுத்தத்தை குறைக்கும் வகையில் தவணை முறை திட்டத்தை மீண்டும் அறிமுகப்படுத்தும்.

## 20. மின்னனு சேவைகள் (Online Services)

பொது மக்கள் பயனுறும் வகையில் ஒப்பந்தப் புள்ளி, ஏலம் மற்றும் ஒதுக்கீடுகள் போன்ற பல்வேறு சேவைகளை எளிதாக்கும் வகையில் மின்னனு சேவைகளாக வழங்கப்படும்.



# கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள்

## 21. சமுதாயக் கூடம் நவீன மயமாக்கல்

இடம் : செங்கல்பட்டு மாவட்டம்

சங்கத்தின் பெயர் : கார்த்திகேயபுரம் கூட்டுறவு சங்கம்

மதிப்பீடு : ரூ.75.00 இலட்சம்

செங்கல்பட்டு மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், மடிப்பாக்கத்தில் உள்ள கார்த்திகேயபுரம் கூட்டுறவு சங்கத்தின் சமுதாய நலக் கூடத்தில் மின்தூக்கி, குளிர்சாதன வசதி மற்றும் இதர நவீன வசதிகளுடன் ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும்.



## 22. கடைகள் கட்டுதல்

இடம் : வேலூர் மாவட்டம்

சங்கத்தின் பெயர் : காட்பாடி கூட்டுறவு நகரமைப்புச் சங்கம்

மதிப்பீடு : ரூ.70.00 இலட்சம்

வேலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள காட்பாடி கூட்டுறவு நகரமைப்புச் சங்கத்திற்கு சொந்தமான நிலத்தில் 24 கடைகள் ரூ.70.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

## நகர் ஊரமைப்பு இயக்ககம்



## 23. சோளிங்கர், வடலூர், திருக்கோவிலூர் மற்றும் கூடலூர் ஆகிய நகரங்களுக்கு முழுமைத் திட்டங்கள் (Master Plans) தயாரித்தல்.

சோளிங்கர், வடலூர், திருக்கோவிலூர் மற்றும் நீலகிரி மாவட்டம் – கூடலூர் ஆகிய நகரங்களுக்கு முழுமைத் திட்டங்கள் இல்லை. இயற்கை வளத்தை பாதுகாக்கவும், புராதன தொன்மையினை பாதுகாக்கவும் திட்டமிட்ட வளர்ச்சியினை உறுதிப்படுத்த முழுமைத் திட்டங்கள் (Master Plans) தயாரிக்கப்படும்.

## 24. மயிலாடுதுறையில் புதிய மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் உருவாக்குதல்.

பொதுமக்கள் திட்ட அனுமதிகளை தங்கள் மாவட்டத்தில் பெறும் வகையில் மயிலாடுதுறையில் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் உருவாக்கப்படும்.



## 25. பதினெட்டு மாவட்டங்களில் சொந்த அலுவலக கட்டடங்கள் கட்டுதல்.

**மதிப்பீடு : ரூ.60 கோடி**

திருவாரூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு, அரியலூர், கள்ளக்குறிச்சி, கரூர், நாகப்பட்டினம், நாமக்கல், நீலகிரி, புதுக்கோட்டை, ராமநாதபுரம், ராணிப்பேட்டை, தென்காசி, தேனி, திருப்பத்தூர், திருவண்ணாமலை மற்றும் விருதுநகர் ஆகிய 18 மாவட்டங்களில் இத்துறையின் மாவட்ட அலுவலகங்கள் சொந்தக் கட்டடத்தில் இயங்க ஏதுவாக ரூ.60 கோடி மதிப்பீட்டில் அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும்.

## சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்



## 26. சென்னைப் பெருநகரப் பகுதி விரிவாக்குதல்

இரண்டாம் முழுமைத் திட்டம் உணர்த்தியுள்ளபடி சென்னைப் பெருநகர எல்லையை ஒட்டியுள்ள பகுதிகளில் ஏற்பட்டு வரும் விரைவான வளர்ச்சி மற்றும் அதற்கான உட்கட்டமைப்பு தேவைகளைக் கருத்தில் கொண்டு திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் சில பகுதிகள் மற்றும் அரக்கோணத்தை உள்ளடக்கி சென்னை பெருநகரப் பகுதி விரிவாக்குதல் பற்றி பொதுமக்கள் கருத்தினை பெற்று விரிவாக்கப்படும்.

## 27. மீஞ்சூர் முதல் வண்டலூர் வரையிலான வெளிவட்டச் சாலையை ஒட்டி அமைந்துள்ள நிலத்தில் ஒருங்கிணைந்த திட்டம் செயல்படுத்துதல்.

வெளிவட்டச் சாலையின் கிழக்கு எல்லையை ஒட்டிய, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்குச் சொந்தமான 50 மீட்டர் அகலம் கொண்ட 770 ஏக்கர் நிலத்தின் சிறந்த பயன்பாட்டை அறிவதற்கான ஆய்வில் பரிந்துரைக்கப்பட்ட ஒருங்கிணைந்த குடியிருப்பு நகரியம், தோட்டக்கலை பூங்கா, அவசர சிகிச்சை மையம், தொழிற்சாலைகள் மற்றும் தொழிலாளர் குடியிருப்புகள், மாநாட்டு அரங்கம், போக்குவரத்து நகர் மற்றும் சேமிப்பு கிடங்குகள் வளாகம் போன்ற பல்வேறு திட்டங்களுக்கான விரிவான சாத்தியக்கூராய்வு செய்து சாத்தியப்படும் திட்டங்கள், அருகிலுள்ள தனியார் நிலங்களையும் இணைத்து நிலச்சேர்ம (Land Pooling) பகுதி வளர்ச்சித் திட்டத்தில் செயல்படுத்தப்படும்.



## 28. கோயம்பேடு மொத்த விற்பனை வளாகத்தை மேம்படுத்துதல்

**மதிப்பீடு – ரூ.20 கோடி**

கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தை நவீனப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி அங்காடி வளாகத்தில், பொருத்தமான போக்குவரத்து மேலாண்மை நடவடிக்கைகள், திறன்மிகு குப்பை அகற்றல் மற்றும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள், பொதுமக்களுக்கான கூடுதல் பொதுவசதிகள் ஆகியவை ரூ.20.00 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

## 29. பழைய மகாபலிபுரம் சாலையையும் கிழக்கு கடற்கரை சாலையையும் இணைக்க மேம்பாலம் கட்டுதல்

### மதிப்பீடு – ரூ.180 கோடி

பழைய மகாபலிபுரம் சாலையையும் கிழக்கு கடற்கரை சாலையையும் இணைக்கும் வகையில், ஒக்கியம் துரைப்பாக்கம் கண்ணகி நகருக்கும், ஈஞ்சம்பாக்கத்திற்கும் இடையே ஏற்கனவே உள்ள சாலைகளை அகலப்படுத்தி பக்கிங்காம் கால்வாய் மீது சுமார் ரூ.180.00 கோடி செலவில் உயர் மட்ட சுழற்சாலை வகை மேம்பாலம் கட்டப்படும்.



## 30. தகவல் தொழில்நுட்ப சேவைகள் செயல்படுத்துதல்

### மதிப்பீடு – ரூ.4 கோடி

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் ஒற்றைச் சாளர அனுமதி, திட்டக் கண்காணிப்பு, மின் ஏலம், மின்–ஒப்பந்தப்புள்ளி, நிலப் பதிவுகள் மற்றும் சொத்து மேலாண்மையை மின் இலக்கமயமாக்குதல் போன்ற மேம்பட்ட தகவல் தொழில்நுட்ப சேவைகள் ரூ.4 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.